# கல்லூரி மாணவர்களுக்கு கை கணினி அல்லது மடிக்கணினி வழங்கிடும் திட்டத்திற்கு முதல் கட்டமாக ரூ.2000 கோடி ஒதுக்கீடு!

## சட்டப்பேரவையில் அமைச்சர் தங்கம் தென்னரசு பதிலுரை.. 3ஆம் பக்கத் தொடர்ச்சி

இந்தியாவிலேயே அதிக எண்ணிக்கையிலான திருக்கோயில்களைக் கொண்டிருக்கக்கூடிய தமிழ்நாட்டில், முன் எப்போதும் இல்லாத அளவிற்கு இந்து சமய அறநிலையத் துறை மிகச் சிறப்பாகப் பணியாற்றி வருவதை நம்முடைய மாமன்ற உறுப்பினர்கள் நன்றாக அறிவார்கள். கடந்த நான்கு ஆண்டுகளில் 2,662 கோயில்களுக்கு திருக்குடமுழுக்கு நடைபெற்றுக் கொண்டிருப்பதை ஆன்மீக அன்பர்கள் அனைவரும் பாராட்டிக் கொண்டிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

இந்து சமய அறநிலையத் துறைக்குச் சொந்தமான 7,327 ஏக்கர் நிலங்களும், 36.38 இலட்சம் சதுர அடி மனைகளும், 5.98 இலட்சம் சதுர அடி கட்டடங்களும் இந்த அரசு எடுத்திருக்கக்கூடிய பெரும் முயற்சியின் காரணமாக ஆக்கிரமிப்புகள் அகற்றப்பட்டு, (மேசையைத் தட்டும் ஒலி) திருக்கோயிலினுடைய வசமாக்கப்பட்டிருக்கிறது. நம்முடைய இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் எடுத்துக் கொண்டிருக்கக்கூடிய இந்த முயற்சிகளின் காரணமாக மீட்கப்பட்டிருக்கக்கூடிய இத்தகைய சொத்துக்களுடைய மொத்த மதிப்பு 7,185 கோடி ரூபாயாகும் என்பதை நான் பெருமையோடு தெரிவிக்க விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

### ஊரக வளர்ச்சித்துறை

அதேபோல, ஊரக வளர்ச்சித் துறையை எடுத்துக்கொண்டால், கடந்த அ.இ.அ.தி.மு.க ஆட்சியிலே 10 ஆண்டு காலம் 2016 ஆம் ஆண்டு முதல் 2021 ஆம் ஆண்டு வரை, கடந்த 5 ஆண்டுகளிலே, நீங்கள் ஆட்சிப் பொறுப்பிற்கு வந்து அந்த 5 ஆண்டுகளிலே அதற்கு கட்டமாக இருக்கக்கூடிய அந்த 5 ஆண்டுகாலங்களில் நீங்கள் வீடு வழங்குவதற்கு ஒரு திட்டதைக் கொண்டு வந்தீர்கள். அதாவது வருடத்திற்கு 20 ஆயிரம் வீதம் 1 இலட்சம் பசுமை வீடுகள் கட்டப்படும் என்று நீங்கள் அந்தத் திட்டத்தைக் கொண்டு வந்தீர்கள். ஆனால், அந்த ஒரு இலட்சம் வீடுகளில், திராவிட மாடல் ஆட்சியாக இருக்கக்கூடிய முதலமைச்சருடைய ஆட்சிப் பொறுப்பேற்கக்கூடிய அந்தக் காலத்தில் 24 ஆயிரம் வீடுகள் கட்டப்படாமலே இருந்தது. 25 சதவிகிதமான வீடுகள் அன்றைக்குக் கட்டப்படவில்லை. வீடுகளினுடைய கட்டுமானப் பணிகளுக்கு அன்றைக்கு வெறும் 2.10 இலட்சம் ரூபாய் மட்டும்தான் அன்றைக்கு நீங்கள் கொடுத்தீர்கள். அது அந்த 5 ஆண்டுகளிலே ஒரு இலட்சம் வீடுகள் என்று நீங்கள் திட்டமிட்டு, ஆமை வேகத்திலே நடந்து கொண்டிருந்த அந்த முயற்சிகள், திராவிட மாடல் ஆட்சிப் பொறுப்பேற்றுக் கொண்டதற்குப் பிறகு அது jet வேகத்திலே பயணிக்கத் துவங்கி, இன்றைக்கு ஒவ்வொரு வீடும், ரூ.3 இலட்சத்து 50 ஆயிரம் மதிப்பீட்டில் (மேசையைத் தட்டும் ஒலி) 360 சதுரடிப் பரப்பளவில், ஆண்டுக்கு 1 இலட்சம் வீடுகள் 3,500 கோடி ரூபாய் மதிப்பீட்டில் எதிர்வரும் 2030 ஆம் ஆண்டிற்குள் 8 இலட்சம் குடிசை வீடுகளை concrete வீடுகளாக்கும் நோக்கத்தோடு கலைஞரின் கனவு இல்லம் திட்டம் தொடங்கப்பட்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி).

இந்தத் திட்டத்திற்காக இதுவரை ஏறத்தாழ 2,150 கோடி ரூபாய் செலவுகள் செய்யப்பட்டிருக்கிறது. அனைத்து வீடுகளும் மே மாதத்திற்குள் முடிக்கப்படும் என்பதை ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் இங்கே தெரிவித்திருக்கிறார்கள்.

எனவே, 5 ஆண்டுகளிலே 1 இலட்சம் வீடுகளைக் கட்டுவதற்கு திட்டமிட்டிருக்கக்கூடிய நீங்கள் எங்கே இருக்கிறீர்கள், ஆண்டுக்கு 1 இலட்சம் வீடுகள் கட்டக்கூடிய நாங்கள் எங்கே இருக்கிறோம் என்கின்ற ஒப்பீட்டை நான் உங்களுடைய மனச்சான்றுக்கும் நாட்டு மக்களுக்கும் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

அதேபோல, குடிநீர் வடிகால் வாரியம். அதன்மூலமாக 2011 முதல் 2021 வரையிலான 10 ஆண்டுகளில் மொத்தம் 88 திட்டங்கள் 7,817 கோடி ரூபாய் செலவில் நிறைவேற்றப்பட்டு, மக்கள்பயனடைந்திருக்கிறார்கள். அதேவேளையில் 4 ஆண்டுகள் நம்முடைய திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிப் பொறுப்பேற்றதற்குப் பிறகு, 16 புதிய திட்டங்கள் உருவாக்கப்பட்டு மொத்தம் 178 குடிநீர்த் திட்டங்களுக்கு 38 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பீட்டில் செயலாக்கத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டு, 3 கோடியே 23 இலட்சம் மக்கள் பயன்பட்டிருக்கிறார்கள் என்பதை நான் இங்கே தெரிவிக்க விரும்புகிறேன்.

### உலக விளையாட்டு அமைப்புகளின் பாராட்டுகள்!

**அதைபோல, இளைஞர் நலன். தமிழ்நாட்டினுடைய அரசின் துறைகளிலேயே மிக சமீபக் காலத்தில், இன்னும் சொல்ல வேண்டுமென்று சொன்னால், நம்முடைய துணை முதலமைச்சர் அவர்கள் இந்தத் துறைக்கு பொறுப்பேற்றுக் கொண்டதற்குப் பிறகு (மேசையைத் தட்டும் ஒலி) மிக அதிகமான கவனம் தமிழ்நட்டிலே மட்டுமின்றி, இந்திய அளவிலும், உலக அளவிலும் கவனம் பெற்றுக்கொண்டிருக்கக்கூடிய ஒரு துறையாக இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைந்திருக்கிறது.**

**முன் எப்போதும் இல்லாத அளவில் நம்முடைய துணை முதலமைச்சர் அவர்களுடைய தலைமையில் இந்தத் துறைகள் தமிழ்நாட்டில் நிகழ்த்தியிருக்கக்கூடிய சாதனைகளைப் பார்த்து, உலகெங்கும் இருக்கக்கூடிய விளையாட்டு அமைப்புகள் தங்களுடைய மனமார்ந்த பாராட்டுகளை தினமும் தெரிவித்து வந்திருக்கிறார்கள்.**

**2011 முதல் 2021 ஆம் ஆண்டுவரை, சராசரியாக 1 ஆண்டுக்கு 188 கோடி ரூபாய் அளவில் சுமார் 2 ஆயிரத்து 77 கோடி ரூபாய் கடந்த 10 ஆண்டுகளிலே அ.தி.மு.க ஆட்சியில் இந்தத் துறைக்கு ஒதுக்கப்பட்டிருந்திருக்கிறது. ஆனால், கழகம் பொறுப்பேற்றுக் கொண்டிருக்கக்கூடிய இந்த 4 ஆண்டுகளில் ஆண்டுக்கு சராசரியாக 386 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டு இதுவரையில் 1,933 கோடி ரூபாய் 5 ஆண்டுகளிலே அதிக அளவிலே நிதி ஒதுக்கம் செய்யப்பட்டிருக்கிறது (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை நான் தெரிவிக்க விரும்புகிறேன். 2011 ஆம் ஆண்டிலிருந்து 2021 ஆம் ஆண்டுவரை அந்த 10 ஆண்டு காலங்களில், நீங்கள் ஆட்சிப் பொறுப்பிலே இருந்திருக்கிறபோது அளவிலே சாதனை படைத்திருக்கக்கூடிய 3 நபர்களுக்கு மட்டுமே, பொதுத் துறை நிறுவனங்களிலே வேலைவாய்ப்புகளை நீங்கள் பெற்றுத் தந்தீர்கள்.**

**ஆனால், கழகம் பொறுப்பேற்றுக் கொண்டிருக்கக்கூடிய இந்த நான்கு ஆண்டுகளில், 93 விளையாட்டு வீரர்களுக்கு, வீராங்கனைகளுக்கு பல்வேறு அரசு மற்றும் பொதுத் துறை நிறுவனங்களில் வேலைவாய்ப்பினை நாம் வழங்கியிருக்கிறோம் என்பதை நான் இங்கே தெரிவிக்க விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)**

## இந்த நான்காண்டு கால கழக ஆட்சியில், 93 விளையாட்டு வீரர்கள் வீராங்கனைகளுக்கு பல்வேறு அரசு மற்றும் பொதுத் துறை நிறுவனங்களில் நாம் வேலைவாய்ப்புகள் வழங்கியிருக்கிறோம்!

### எல்லாருக்கும் எல்லாம்!

அதைப்போல, 'எல்லோருக்கும் எல்லாம்' என்ற முழக்கம் மனித இனத்தில் மட்டுமல்ல, புவியில் வாழும் அனைத்து இனங்களுக்கும் அது உள்ளடக்கியது என்கின்ற புரிதலோடு நம்முடைய அரசு செயலாற்றி வருகிறது. கடந்த நான்கு ஆண்டுகளில் மட்டும் 19 ஈர நிலங்கள் மற்றும் பறவைகள் சரணாலயங்களுக்கான Ramsar சான்றிதழ் அங்கீகாரத்தைப் பெற்று, இந்தியாவிலேயே தமிழ்நாடு முன்னணி மாநிலமாகத் திகழ்ந்து கொண்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

சுற்றுச்சூழலுக்கு முக்கியத்துவம் கொடுக்கும் வகையில் திட்டங்கள் 2011-ஆம் ஆண்டிலிருந்து 2020-ஆம் ஆண்டு வரையிலான 10 ஆண்டுக்காலங்களில் பெரியளவில் எதுவும் எடுத்துக்கொள்ளப்படவில்லை என்பதையும் நான் சொல்லாமலேயே நம்முடைய உறுப்பினர்கள் நன்றாக அறிவீர்கள்.

### மருத்துவச் சுற்றுலா! விரைவில் அறிவிப்பு!

கடந்த நான்கு நாட்களாக, 2025-2026-ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையின் மீது நடைபெற்ற விவாதத்தில் பேசியிருக்கக்கூடிய நம்முடைய சட்டமன்ற உறுப்பினர்கள் பலரும் பல நல்ல கருத்துகளை இங்கே வைத்திருக்கிறார்கள். அவர்கள் அனைவருக்கும் என்னுடைய நன்றியினை நான் உரித்தாக்குகிறேன். குறிப்பாக, திருச்செங்கோடு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் மருத்துவ சுற்றுலா-medical tourism குறித்து, அதிக கவனம் செலுத்த வேண்டுமென்று குறிப்பிட்டார்கள். அவருக்கு நான் சொல்வதெல்லாம், தமிழ்நாடு, இந்தியாவிலேயே மருத்துவம் மற்றும் சுகாதாரத் துறையில் சிறந்து விளங்கக்கூடிய ஒரு மாநிலமாக இன்றைக்கு உருவெடுத்து வந்திருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) மருத்துவத்தின் பொருட்டு, பல்வேறு மாநிலங்களிலிருந்தும், வெளிநாடுகளிலிருந்தும் தங்களுடைய சிகிச்சைக்காக, சென்னை, கோவை மற்றும் மதுரை ஆகிய முக்கியப் பகுதிகளுக்கு நோயாளிகள் வந்தவண்ணம் இருக்கிறார்கள். அதைக் கருத்தில் கொண்டு, மருத்துவத் துறையிலே பல நல்ல திட்டங்களைத் தீட்டுவதற்காக, முதலமைச்சர் அவர்கள் அறிவுரைகளை வழங்கியிருக்கிறார்கள். அதற்கான அறிவிப்பு, உறுப்பினர்கள் அவர்கள் கோரியவாறு medical tourism வரவேண்டும் என்கிற அறிவிப்பை சுற்றுலாத் துறையின் மானியக் கோரிக்கையின்மீது, நம்முடைய சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள் உரையாற்றுகிற போது, அவர்கள் உங்களுக்கு நல்ல செய்தியினைத் தருவார்கள் என்பதை நான் உங்களிடத்திலே தெரிவிக்க விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அதேபோல, இங்கே பேசிய விராலிமலை சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் விஜயபாஸ்கர் தமிழ்நாட்டிலுள்ள பலவகை தொழில்நுட்பக் கல்லூரி-polytechnic-களில் 4.0 தரத்தில் எப்போது நீங்கள் தரமுயர்த்தித் தருவீர்கள் என்று கேட்டார்கள். அதற்கான கட்டுமானப் பணிகள் விரைவிலே தொடங்கி, இந்தக் கல்வியாண்டிலேயே அவை நிறைவேற்றப்படும் என்பதை அவர் இந்த அவைக்கு வராவிட்டாலும்கூட இந்த அவையின் மூலமாக நான் தெரிவிக்க விரும்புகிறேன்.

### சமண - பவுத்த பண்பாட்டு அருங்காட்சியகங்கம்!

சட்டமன்ற உறுப்பினர் சிந்தனை செல்வன் அவர்கள் தமிழ்நாட்டிலே செழித்திருந்த, சமண, பௌத்த பண்பாட்டு சிறப்புகளை தெளிவுபடுத்தும்விதமாக, காஞ்சிபுரத்திலோ அல்லது நாகப்பட்டினத்திலோ ஒரு அருங்காட்சியகம் அமைக்க வேண்டுமென்று இங்கே பேசினார். பல முறை எங்களிடத்திலும் அவர் வலியுறுத்தியிருக்கிறார். நாளந்தாவிற்கு இணையான காஞ்சி மாநகர் பகுதிகளில் கல்வியில் சிறந்து, உலகத்தின் பல பகுதிகளிலிருந்தும் பல சிந்தனையாளர்களும், அறிஞர்களும் ஈர்த்த பெருமையை உடையது. ஆகவே, சட்டமன்ற உறுப்பினர் அவர்களின் கோரிக்கையை கவனமாக பரிசீலித்து, சம்பந்தப்பட்ட மானியக் கோரிக்கையின்போது, தமிழ்நாட்டு முதலமைச்சர் அவர்களின் அனுமதியோடு, அதற்குரிய அறிவிப்பினை நம்முடைய அரசு வெளியிடும் என்பதை நான் இங்கே உங்களிடத்தில் தெரிவிக்க விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அதைப்போல, இந்த விவாதத்தில் பங்கேற்று நேற்று இங்கே பேசிய சட்டமன்ற உறுப்பினர் தங்கமணி அவர்கள் GST வரி விதிப்பிலே வரக்கூடிய சிக்கல்கள் மற்றும் பாதகங்களையெல்லாம் இங்கே சொன்னார்கள். அவற்றையெல்லாம் ஒன்றிய அரசு மற்றும் அனைத்து மாநில அரசுகளின் பிரதிநிதிகள் இடம்பெற்றிருக்கக்கூடிய GST Council meeting-ல் உரிய முறையில் எடுத்துச் சொல்லி, அதற்கான தீர்வுகளை நாங்கள் காண்போம் என்பதையும் நான் குறிப்பிட விரும்புகிறேன்.

நேற்று பேசும்போது அவர் இன்னொன்றையும் சொன்னார். பேசி முடிக்கும்போது கடைசியாக சொல்லிவிட்டுச் சென்றீர்கள். திட்டத்தை அறிவித்திருக்கிறீர்கள். அடுத்த 2 ஆண்டுகளில் 20 இலட்சம் கல்லூரி மாணவர்களுக்கு கை கணினி அல்லது மடிக்கணினி வழங்கப்படும் என்று சொல்லியிருக்கிறீர்கள். அதற்காக 2 ஆயிரம் கோடி ரூபாய் இந்த நிதியாண்டிலே ஒதுக்கப்பட்டிருக்கிறது. இதை வைத்து ஒரு கூட்டல் கணக்கு போட்டுப் பார்த்தால் ஒரு laptop-ற்கு 10 ஆயிரம் ரூபாய்தான் வருகிறது. 10 ஆயிரம் ரூபாயில் எத்தகையதொரு தரமான கணினியை வழங்க முடியும் என்று அவர்கள் ஒரு மனக் கணக்கைப் போட்டு இங்கே பேசினார்கள். நான் அவர்களுக்குச் சொல்லிக்கொள்ள விரும்புவதெல்லாம், இந்தத் திட்டம் அறிவிக்கின்ற போது, அடுத்த இரண்டு ஆண்டுகளில் 20 இலட்சம் மாணவர்கள் என்று சொன்னோம். அதற்கு முதற்கட்டமாக இந்த ஆண்டு 2 ஆயிரம் கோடி ரூபாய் நாங்கள் ஒதுக்கியிருக்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி)

### மாணவர்களுக்கு மடிக் கணினிகள்!

அப்படியென்றால், அடுத்த ஆண்டு வருகிறபோது மேலும் அதற்கு இரண்டாயிரம் கோடி ரூபாய் ஒதுக்குகிற போது, இப்போது நீங்கள் அந்தக் கணக்கை கூட்டி, கழித்துப் பார்ப்பீர்கள் என்று சொன்னால் அந்தக் கணக்கிலே உங்களுக்கு வரும். (மேசையைத் தட்டும் ஒலி) எனவே, மாணவர்கள் விரும்பி அந்த மடிக்கணினியை பயன்படுத்தக்கூடிய அளவிற்கு ஒரு தரமான மடிக்கணினியை வழங்கிட இந்த அரசு உறுதி பூண்டிருக்கிறது. எனவே, தரம் குறித்த கவலை உங்களுக்கு நிச்சயமாகத் தேவையில்லை என்பதையும் நான் சொல்வேன். எனவே, சராசரியாக எடுத்துக் கொண்டால் ஒரு மடிக்கணினி 20 ஆயிரம் ரூபாய் அளவிலே இருக்கும் என்கின்ற வகையிலே எதிர்பார்த்து, இந்த வருடம் இரண்டாயிரம் கோடி ரூபாய் அதற்கு முதற்கட்டமாக நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது. திறந்த வெளி ஒப்பந்தங்கள் அதற்கு கோரப்பட்டு, முடிவு செய்த பிறகு, அதற்கு பிறகு தெரியவரக்கூடிய விலைக்கு ஏற்ப, இதற்கான நிதி ஒதுக்கங்கள் மாறக்கூடிய வாய்ப்பிருக்கிறது.

எனவே, உறுப்பினர் அண்ணன் அவர்களுக்கு தெரிவிக்க விரும்புவதெல்லாம் நம்முடைய கல்லூரி மாணவர்களுக்கு, அவர்கள் விரும்பி பயன்படுத்தும் வகையில், ஏன் சட்டமன்ற உறுப்பினர் அவர்களே கொஞ்சம் பொறாமைப்படக்கூடிய வகையில் (மேசையைத் தட்டும் ஒலி) தரமான மடிக்கணினிகள் அந்த மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கு தேவையான அனைத்து உள்ளடக்கங்களுடன் வழங்கப்படும் என்பதை நான் தெரிவிப்பேன்.

இன்னொன்றுகூட நான் உங்களிடத்தில் சொல்கிறேன். தவறாக இல்லை. எல்லோரும் இருக்கிறீர்கள். நான் இந்த நிதி ஒதுக்கம் குறித்து மனக்கணக்கு என்று சொன்னேன். அந்த மனக்கணக்கின் அடிப்படையில், சற்று கவனக்குறைவாக மனக்கணக்கு போட்டுவிட்ட என்னுடைய அருமை அண்ணன் அவர்களுக்கும், உட்கார்ந்திருக்கக்கூடிய அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய சக சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் என்னுடைய ஓர் அன்பான வேண்டுகோளையும் நான் இங்கே தெரிவிக்க விரும்புகிறேன்.

மக்கள் திலகம் எம்.ஜி.ஆர். அவர்கள் கழகத்திலே இருந்தபோதும் சரி, அவர் கழகத்திலிருந்து வெளியேறி அவர் இயக்கம் கண்டபோதும் சரி, அவர்மீது பெரும் மதிப்பினைக் கொண்டவர்கள் நாங்கள். இன்னும் சொல்ல வேண்டுமென்று சொன்னால், உட்கார்ந்திருக்கிறாரே நம்முடைய முதலமைச்சர் அவர்கள், அவரிடத்திலே மக்கள் திலகம் எம்.ஜி.ஆர். அவர்கள் மிகுந்த அன்பினை நேரடியாகக் கொண்டவர்கள். அவருடைய படம் ஒன்று வெளிவருகிறது என்றால், அந்தப் படத்தைப் பார்த்துவிட்டு, உங்கள் கருத்து என்ன என்று அவரிடத்திலே கேட்கக்கூடிய அளவிற்குக்கூட (மேசையைத் தட்டும் ஒலி) உரிமையும், அன்பும் பாராட்டக்கூடிய அளவில் இருந்தவர்கள் நாங்கள்.

### இயக்கப் பற்று

அதேபோல, எங்களோடு நீங்கள் அரசியல் களத்திலே நீண்டகாலமாக களமாடிக் கொண்டிருக்கக் கூடியவர்களும் நீங்களாக இருக்கிறீர்கள். தங்களோடு இருக்கக்கூடிய தொண்டர்களும், அதேபோல கொள்கையிலே மாறுபட்டிருந்தாலும், இயக்கப் பற்றின் காரணமாக அவர்களும் அரசியல் களத்திலே களமாடக்கூடிய தொண்டர்கள் என்பதை நாங்கள் மறுக்கவில்லை. ஆனால், அந்தத் தொண்டர்களோடு ஓர் அரசியல் பயணத்திலே உங்களோடு இலட்சக்கணக்கான தொண்டர்கள் இங்கே இணைந்து பயணித்துக் கொண்டிருக்கக்கூடிய வேளையில், நீங்கள் கூட்டல், கழித்தல் கணக்கை தங்கமணி அவர்கள் இங்கே போட்டுக் கொண்டிருக்கிறீர்கள். ஆனால், உங்களுடைய கூட்டல், கழித்தல் கணக்கை எல்லாம் (மேசையைத் தட்டும் ஒலி) வேறோர் இடத்திலே உட்கார்ந்து, இன்னொருவர்கள் போட்டுக் கொண்டிருக்கிறார்கள் (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை நீங்கள் மறந்துவிடக்கூடாது. அதுவும் வேறு எங்கோ ஒருவர் உட்கார்ந்து, உங்களுடைய தொண்டர்களுடைய எதிர்காலம், உங்களுடைய அனுதாபிகளுடைய எதிர்காலத்தை எல்லாம் காலத்திலே நீர்த்துப் போகச் செய்யக்கூடிய அளவிற்கு சாணக்கியத் தந்திரத்தோடு, இந்த கணக்குகளை சிலர் எங்கோ உட்கார்ந்து போட்டுக் கொண்டிருக்கிறார்கள் (மேசையைத் தட்டும் ஒலி). நான் அண்ணன் அவர்களிடம் கேட்டுக் கொள்வேன். இந்த மடிக்கணினி விவகாரத்தில் சற்று கவனக்குறைவாக நீங்கள் இருந்துவிடாதீர்கள். உங்கள் மடியிலே இருக்கக்கூடிய கனத்தை பறித்துக்கொள்ள நினைப்பவர்களிடமிருந்து (மேசையைத் தட்டும் ஒலி), நீங்கள் அனைவரும் சற்று கவனமாக இருக்க வேண்டும் என்பதை நான் உங்கள்மீது இருக்கக்கூடிய உரிமை, அன்பின் காரணமாக இங்கே கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

நம்முடைய உறுப்பினர் திருமதி வானதி சீனிவாசன் அவர்கள் மிகுந்த மகிழ்ச்சியோடு சிரிக்கிறார்கள். (சிரிப்பலை) அப்படியானால் 'பூனைக்குட்டி வெளியே வந்துவிட்டது' என்பதுதான் அர்த்தம் என்பதை நான் இங்கே தெரிவிக்க விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

### தமிழர் நிதி நிர்வாகம் தொன்மையும் தொடர்ச்சியும்

அதேபோல இந்த அவையிலே, தமிழர் நிதி நிர்வாகம் தொன்மையும் தொடர்ச்சியும் என்கின்ற ஒரு புத்தகம் இங்கே உங்களிடத்திலே வைக்கப்பட்டிருக்கிறது. முதன்முறையாக The Economic Survey of Tamil Nadu 2024--2025 கொடுத்திருக்கக்கூடிய அந்த report-ஐ நாம் வெளியிட்டிருக்கிறோம். பொதுவாக இந்த இரண்டு ஆவணங்களும் இன்றைக்கு பரவலான வரவேற்பை எல்லா தரப்பிடத்திலிருந்தும் பெற்றிருக்கிறது. இந்த ஆவணங்கள் மிகுந்த முயற்சிக்குப் பிறகு, ஏறத்தாழ நான்கு மாத கால உழைப்பிற்கு பிறகு, இன்றைக்கு உருவாக்கப்பட்டிருக்கிறது என்று சொன்னால், அதை வழிகாட்டிய பெருமை நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு இருக்கிறது (மேசையைத் தட்டும் ஒலி). இந்த இரண்டு ஆவணங்களும் மிகப்பெரிய அளவிலே உருவாக்கப்படுவதற்கு, உள்ளபடியே சொல்ல வேண்டுமென்று சொன்னால் தன்னுடைய இயல்பினால், தன்னுடைய முகம்காட்ட மறுக்கக்கூடிய நம்முடைய மதிப்பிற்குரிய நிதித் துறையினுடைய செயலாளர் அவர்கள், அவர்களே அவருக்கு ஆசிரியர் பொறுப்பாக வும் இருந்து, இந்த இரண்டு ஆவணங்களையும் மிகச் சிறப்பாக உருவாக்கியிருக்கிறார்கள்.

## தமிழர்கள் அதிகமாக வசிக்கும் நாடுகள் மட்டுமன்றி, பல உலக நாடுகளிலும் “தமிழ் புத்தகக் கண்காட்சிகள்” நடத்த கழக அரசு திட்டம்!

நான் இந்த நேரத்தில் உங்கள் அனைவரின் சார்பில் நிதித் துறைச் செயலாளர் உதயச்சந்திரன், IAS, அவர்களுக்கும், (மேசையைத் தட்டும் ஒலி) அவரோடு இணைந்து பணியாற்றி இருக்கக்கூடிய குழுவினருக்கும் நான் என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

என்னுடைய உரையினை நான் நிறைவு செய்யக்கூடிய கட்டத்திற்கு முன் சில செய்திகளை நான் உங்களிடத்திலே பகிர்ந்துகொள்ள விரும்புகிறேன். தமிழ்நாட்டிற்கென சில தனித்துவமான கதைகளும், வரலாறுகளும் கால வெளியிலே நிரம்ப இருக்கிறது. அதில் ஒன்றை நான் இந்த அவைக்கு கவனப்படுத்த விரும்புகிறேன்.

திருவீழிமிழலை என்கிற ஒரு ஊர் தமிழ்நாட்டிலே திருவாரூர் மாவட்டத்திலே இருக்கிற ஒரு ஊர். அன்றைய ஒருங்கிணைந்த தஞ்சை மாவட்டத்திலும், இன்றைய திருவாரூர் மாவட்டத்திலும் இருக்கக்கூடிய ஊர். இசை வல்லுநர்களாலே இன்றைக்கும் மிகப்பெரிய அளவிலே புகழ் அடைந்திருக்கக்கூடிய அந்த ஊர் திருவீழிமிழலை. சிற்பக் கலைக்கு எடுத்துக்காட்டாக வௌவால்நத்தி மண்டபம் என்று கூட ஒரு மண்டபம் உண்டு. தமிழ்நாட்டிலே சிற்பக் கலையைக் கோயில்களிலே செய்யக்கூடியவர்கள் சில ஊர்களை விலக்கிவிட்டு அதற்கு புறனடை செய்வார்கள். அதிலே இருக்கக்கூடிய அந்த வௌவால்நத்தி மண்டபமும் அத்தகைய சிறப்பு வாய்ந்த ஊர் அந்த ஊர்.

அந்த ஊருக்கு மேலும் ஒரு சிறப்புண்டு.

## சூலூரிலும் - பல்லடத்திலும் நாம் நிறுவிடவுள்ள - இரண்டு “செமி கண்டக்டர் தொழிற் பூங்கா”க்களால் - கோவை மண்டலம் மேலும் செழுமை அடைந்திடும்!

அந்த ஊருக்கு நான் தொடக்கத்திலே சொன்னதைப்போல 7 ஆம் நூற்றாண்டிலே திருநாவுக்கரசரும், திருஞானசம்பந்தரும் அந்த ஊருக்கு வந்து தங்கி இருந்தார்கள் என்பது வரலாறு. அப்படி அவர்கள் தங்கி இருக்கக்கூடிய காலக்கட்டத்தில் அந்தப் பகுதியிலே மிகப்பெரிய ஒரு பஞ்சம் ஏற்படுகிறது. நம்முடைய தமிழ்நாட்டில் பழைய பெரியவர்களை எல்லாம் நீங்கள் கேட்டுப் பார்த்தீர்களென்றால் தாது வருச பஞ்சம் என்று ஒரு பஞ்சத்தைப் பற்றிச் சொல்வார்கள். அந்தப் பஞ்சத்தில் பிரிட்டிஷ்காரர்கள் ஆட்சியிலே இருக்கிறபோது தமிழ்நாட்டில் இருக்கக்கூடியவர்கள் கொத்துக்கொத்தாக மடிந்தார்கள் என்று சொல்வார்கள். அதேபோன்று ஒரு பெரிய பஞ்சம் அந்தக் காலத்திலேயே உருவாகி இருந்ததாகச் சொல்கிறார்கள். அப்படி மக்கள் பசியால், பட்டினியால் துடித்துக்கொண்டிருந்த அந்த காலக்கட்டத்தில் அங்கிருக்கக்கூடிய அந்த மக்களுடைய துயரினை அவர்கள் படக்கூடிய கஷ்டத்தைப் பார்த்து பொறுக்க முடியாமல் ஞானசம்பந்தர் அங்கே இருக்கக்கூடிய மிழலை நாதராக இருக்கக்கூடிய அந்த ஊர் இறைவனைப் பற்றி, பார்த்து ஒரு பாடல் பாடினார்.

'வாசி தீரவே, காசு நல்குவீர்
வாசி தீரவே, காசு நல்குவீர்
மாசின் மிழலையீர், ஏச லில்லையே.'

என்று கேட்டார். நாட்டு மக்கள் கஷ்டப்படுகிறார்கள். மிழலையில் இருக்கக்கூடிய சிவபெருமானே எங்கள் மக்களுடைய கஷ்டங்களைப் போக்குவதற்காக நீங்கள் காசு தந்து அருள வேண்டுமென்று மனமுருகி ஞானசம்பந்தர் பெருமான் அங்கே இருக்கக்கூடிய சிவபெருமானிடத்திலே கேட்டதாகவும், உடனடியாக, அங்கே இருக்கக்கூடிய இறைவன் மக்களுடைய கஷ்டத்தைப் போக்க வேண்டுமென்பதற்காக ஞானசம்பந்தருக்கு அந்த இறைவனே நேரிலே வந்து பொற்காசுகளை வழங்கி அந்த பொற்காசுகளின் வாயிலாக அவர் அந்த நாட்டு மக்களுடைய கஷ்டங்களை, பசி, பட்டினியிலிருந்து போக்கினார் என்பது தமிழ்நாட்டிலே கர்ண பரம்பரையாக விளங்கப்படக்கூடிய ஒரு கதை.

அந்தக் கதையிலே சொல்லும்போது கூட ஞானசம்பந்தருடைய காலத்திற்கு பிற்காலத்தில் வந்த சுந்தரமூர்த்தி நாயனார்.

“மிழலை இருந்தும் நீர் தமிழோடு இசை கேட்கும்
இச்சையால் காசு நித்தம் நல்கினீர்”

என்று பாடினார். மக்கள் படும்பாட்டுத் தாண்டி ஞானசம்பந்தர் பாடும் தமிழ் பாட்டுக்காகவும் சேர்த்துத்தான் நீ காசு கொடுத்ததாய் என்று கவிதை நயத்தோடு சுந்தரமூர்த்தி நாயனார். poetic expression என்று சொல்வார்களே அதேபோன்று அவர் சொன்னார்.

நீங்கள் சிவபெருமானைப் பற்றி சொல்கிறபோது ‘எந்நாட்டவர்க்கும் இறைவன்’ என்று அழைத்தாலும், அவர் தென்னாட்டினுடைய சிவனே என்கிற காரணத்தால் தென்னாட்டு மக்கள், தமிழ்நாட்டு மக்கள் கஷ்டப்பட போகின்ற ஒரு காலக்கட்டத்தில் தான் இறைவனாக இருந்தாலும் ஓடி வந்து தமிழ்நாட்டு மக்களுடைய கஷ்டத்திற்கு, துயர் துடைப்பதற்கு கடவுள் வந்து காசு கொடுத்த நிலை அன்றைக்கு இருந்தது. ஆனால், இன்றைக்கு நிலை என்ன? தமிழ்நாட்டு மக்கள் எவ்வளவு கஷ்டப்பட்டாலும் சரி, பசி வந்தாலும் சரி, பட்டினி வந்தாலும் சரி அவர்களுக்கு என்ன பிரச்சினை வந்தாலும் சரி, கடவுளே வந்து காசு கொடுத்திருந்தாலும் தமிழ்நாட்டிற்கு காலணா காசு, தம்பிடி காசு நாங்கள் கொடுக்க மாட்டோம் என்று ஒன்றிய அரசு இன்றைக்கு விடாப்பிடியாக இருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி).

### வல்லாதிக்க மனோபாவம்!

கடும் மழையிலும், வெயிலிலும் ஓடாய் உழைத்து இன்றைக்கு நம்முடைய தாய்மார்கள் உருகி இருக்கிறார்கள். 100 நாள் வேலையைப் பார்க்கிறார்கள். அவர்கள் எவ்வளவு கஷ்டப்படுகிறார்கள் என்று தெரியும். அவர்களுக்குரிய நிதியைக் கொடுங்கள் என்று கேட்கிறோம். ‘காசு தீரவே காசு நல்குவீர்’ என்று கேட்டார்.

நிதி வந்தது. ஒரு இடத்திலே கேட்கிறோம். மத்தியிலே இருக்கக்கூடிய ஒன்றிய அரசிடம் கேட்கிறோம். ஓயாது உழைத்திருக்கக்கூடிய இந்த உழைப்பிற்கு நீங்கள் காசு கொடுங்கள் என்று கேட்டால், உழைத்த உழைப்பிற்கு இன்றுவரை ஊதியம் தராமல் மறுக்கிறார்கள். நம்முடைய குழந்தைகளின் கல்விக்கான நிதியைத் தர மறுக்கிறார்கள். நீட்டிய இடத்திலே கையெமுத்தைப் போட்டுக்கொண்டு, நாங்கள் கொடுத்த பணத்தை வாங்கிக்கொண்டு போ என்று சொல்லக்கூடிய அந்த வல்லாதிக்க மனோபாவம் - அதன் காரணமாக தமிழ்நாடு இன்றைக்கு வஞ்சிக்கப்பட்டுக் கொண்டிருக்கிறது. அப்படி நீங்கள் கையெழுத்துப் போட்டுவிட்டுப் போனால்தான் நாங்கள் உரிய நிதியை விடுவிப்போம் என்று நீங்கள் சொன்னால், ‘எமை நத்துவாய் என எதிரிகள் கோடி இட்டு அழைத்தாலும் தொடேன்’ (மேசையைத் தட்டும் ஒலி) என்கின்ற அந்தத் தன்மான உணர்வோடு 2 ஆயிரம் கோடி அல்ல 10 ஆயிரம் கோடி ரூபாயை நாங்கள் இழந்தாலும் எங்கள் கொள்கையை நாங்கள் இழக்கமாட்டோம் என்று நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பிரகடனம் இன்றைக்கு செய்திருக்கிறார்.

### உப்பு வரி

வரலாற்றிலே இன்னுமொரு முக்கியமான செய்தியை நான் தெரிவிக்க வேண்டும். தமிழ்நாட்டிற்கென்று சில தனித்துவமான குணங்கள் உள்ளதாக நான் சொன்னேன். உப்பு மீதான தீர்வை. இது ஆங்கிலேயருடைய ஆட்சிக் காலத்தில் தமிழ்நாட்டிலே நடந்த சம்பவம். உப்பு மீதான தீர்வையை ஒரு மணங்கிற்கு 8 அணாக்களாக உயர்த்துமாறு சென்னை மாநகர அரசுக்கு அன்றைய இந்திய அரசு உத்தரவிட்டது. இதை சென்னை மாகாண அரசு அன்றைக்கு எதிர்த்தது. உப்பு மீதான வரி என்பது மக்களுடைய ஆதரவை இழக்கக்கூடிய வரி. உப்பின்மீது ஏற்கெனவே நாம் விதித்துள்ள வரிச் சுமை அதிகமானது. உழைக்கும் மக்கள் தான் இந்த உப்பை அதிகம் வாங்கி சாப்பிடக்கூடியவர்கள். விலை அதிகரிப்பின் காரணமாக தங்களுக்கும் தங்கள் குடும்பத்திற்கும் தேவைப்படும் அளவிற்கு உப்பு வாங்க காசில்லாமல் அவதிப்படுகிறார்கள் என்று சென்னை மாகாணத்தினுடைய அன்றைய Governor-ஆக இருந்த Trevelyan (Sir Charles Edward Trevelyan) இதைக் கடுமையாக எதிர்த்தார். Trevelyan அவர்களுடைய கருத்தை நிர்வாகக் குழுவிலிருந்த பிரதிநிதிகள் 2 பேர் அன்றைக்கு ஆதரித்தார்கள். வரியை உயர்த்துவதற்குப் பதிலாக வரியைக் குறைத்தால், உப்பு அதிகமாக வாங்கப்படும் என்றும் அதன் வாயிலாக வருவாய் உயரும் என்றும் அவர்கள் யோசனையினைத் தெரிவித்தார்கள்.

உப்பு விற்பனைக் கூடங்களைப் புதிதாகத் திறந்தும், வரி ஏய்ப்புக்கு இடமில்லாமல் உப்பு தயாரித்தல் மற்றும் விற்பனை ஆகியவற்றைக் கடுமையாகக் கண்காணித்தும் வரி வருவாயை நாம் அதிகப்படுத்திக்கொள்ளலாம் என்ற யோசனையைப் அன்றைக்குத் தெரிவித்தார்கள். இதனை அரசுக்கே சென்னை மாநகரத்தினுடைய Governor அவர்கள் அன்றைக்கு அந்த ஆலோசனையை வழங்கினார்கள்.

ஒரு காலத்திலே சென்னையிலிருந்த Governor-கள் எல்லாம் டெல்லியிலே இருக்கக்கூடிய அரசாங்கத்திற்கு (மேசையைத் தட்டும் ஒலி) நல்ல ஆலோசனைகளை எல்லாம் அப்போது வழங்கிக் கொண்டிருந்தார்கள் என்பதை நாம் கவனிக்க வேண்டும்.

தேயிலை சாகுபடி மீதான அந்த வரியையும் கைவிட வேண்டுமென்று அன்றைக்கு ஆலோசிக்கப்பட்டது. ஆனால், உப்பு மீதான உற்பத்தி வரி மாகாணத்திற்கு மாகாணம் வெவ்வேறு விகிதங்களில் 1869-களில் அதிகரிக்கப்பட்டது. சென்னை மாநகரத்தின் Governor-க்கு செவி சாய்க்காமல் அன்றைக்கு மத்தியிலிருந்த இந்திய அரசு உப்புக்கு வரி விதித்ததுதான் பிற்காலத்தில் மகாத்மா காந்தி உப்புச் சத்தியாகிரகப் போராட்டத்திற்கு அவர் அதை முன்னெடுத்து, பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தையே அன்றைக்கு நிலைகுலைய வைத்தது என்பதை நான் உங்களுக்கு இங்கே தெரிவிக்க விரும்புகிறேன். நான் இதன் மூலமாக இந்த அவைக்கு தெரிவிப்பது என்னவென்றால், மக்கள் நலனுக்கு எதிராக தலைநகரிலிருந்து எடுக்கப்படும் எந்தவொரு நடவடிக்கைக்கும் எதிரான குரல் கொடுப்பதற்கு சென்னை மாகாணம் வழிவழியாகத் திகழ்ந்து கொண்டிருக்கிறது (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், மக்கள் பக்கத்தில்தான் என்றைக்கும் இருப்போம் என்பது இந்த மண்ணின் குணம் என்பதையும் நான் இங்கே தெரிவிக்க விரும்புகின்றேன்.

### ஆதிக்கத்திற்கு தலைவணங்காத தமிழ்நாடு!

வடக்கே இருந்து வரக்கூடிய எந்தவொரு ஆதிக்கத்திற்கும் தமிழ்நாடு வரலாற்றில் எந்த காலக் கட்டத்திலும் தலை வணங்கியதில்லை (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை நான் உங்களுக்கு எடுத்துச் சொல்ல வேண்டிய அவசியமில்லை.

மகா அலெக்சாண்டர் இந்தியாவிற்கு வந்தார். மகா அலெக்சாண்டருடைய வெற்றிப் பாதையில் தமிழ்நாடு ஒருபோதும் இருந்ததில்லை. மௌரியப் பேரரசர் சந்திரகுப்த மௌரியரால் தமிழ்நாட்டு எல்லையைத் தொட்டுக்கூடப் பார்க்க முடியவில்லை (மேசையைத் தட்டும் ஒலி). அசோக சக்கரவர்த்தியினுடைய ஆட்சிச் சக்கரம் தமிழ் நிலப்பரப்பில் சுழலவில்லை (மேசையைத் தட்டும் ஒலி). குப்தர்களின் காலம் ‘பொற்காலம்’ என்று அழைக்கப்பட்டாலும் சமுத்திர குப்தனுடைய காலடி இந்தத் தமிழ் மண்ணில் கடைசி வரை படியவில்லை. கனிஷ்கருடைய ஆட்சி எல்லைகள் என்பது விந்தியத்திற்கு தெற்கே ஒருபோதும் தாண்டியதில்லை. அக்பர் பாதுஷாவின் ராஜ்ஜியம் தமிழ்நாட்டை எட்ட முடியவில்லை. இந்துஸ்தானின் பாதுஷா என்று மட்டுமில்லாமல் நான் இந்த Universe-க்கே நான் தான் ராஜா ‘Emperor of the Universe’ என்று தன்னை Alamgir என்று அழைத்துக் கொண்டாரே ஔரங்கசீப், அந்த ஔரங்கசீப்பினால் கூட தமிழ்நாட்டை வெல்ல முடியவில்லை. (மேசையைத் தட்டும் ஒலி) அந்த ஔரங்கசீப்பினாலேயே ‘மலை எலி’ என்று அழைக்கப்பட்டாரே மராட்டிய மண்ணின் சத்ரபதி சிவாஜி அவர்கள், அவரால்கூட தமிழ்நாட்டை ஆட்சி செய்ய முடியவில்லை. (மேசையைத் தட்டும் ஒலி)

இந்த வரலாறு தமிழ் மண்ணிற்கு மட்டுமே உரித்தான வரலாறு என்பதை நான் இந்த அவைக்கு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

நான் முன்னரே சொன்னதுபோன்று, முதல்வர் அவர்கள் ஊட்டிய அந்த தன்மான உணர்வின் வழியில் வானம் பார்த்த பூமியாக இருந்தாலும், மானம் காக்கும் நாடு, எங்கள் தமிழ்நாடு என்கின்ற அந்த உறுதியோடு, (மேசையைத் தட்டும் ஒலி) நம்முடைய முதல்வர் அவர்கள் பெருமையோடு சுட்டிக்காட்டினாரே, அதுபோல பாடமாக நின்றுகொண்டிருக்கும் எங்களுடைய அருமைத் தலைவர் கலைஞர் அவர்களின் அழியாத காவிய வரிகளை, (மேசையைத் தட்டும் ஒலி) நான் நினைவுகூர்ந்து, என் உரையை நிறைவு செய்ய விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**“புலியின் குகையினிலே அழகில்லை– புதுமையல்ல**
**கிலியும் மெய் சிலிர்ப்பும் கீழிறங்கும் தன்மையும் தலைகாட்டா**
**மானத்தின் உறைவிடம்”– எங்கள் தமிழ்நாடு.** (மேசையைத் தட்டும் ஒலி)
**“இமய வரம்பினிலே வீரம் சிரிக்கும்**
**இங்கு வீணை நரம்பினிலே இசை துடிக்கும்**
**அதுவும் மானம், மானம் என்றே முழங்கும்”** (மேசையைத் தட்டும் ஒலி)

என்றே சொல்லி, என் உரையை நான் நிறைவு செய்கிறேன், (மேசையைத் தட்டும் ஒலி)

இவ்வாறு நிதி அமைச்சர் தங்கம் தென்னரசு பதிலுரை வழங்கினார்.